# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 25
ஆண்டு சந்தா ரூ. 100/-

பிப்ரவரி - FEBRUARY
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**


**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...




நமது **'கிருபையின் கீதங்கள்'** பாடல் புத்தகம் புதிய பதிப்பு ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : **92443 14431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை குடும்பமாக கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஆவியானவரின் வார்த்தை

YouTube **@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



# குடும்பத்தின் நோக்கம்

## Purpose of a Family

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால், எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

குடும்பம் என்பது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று, மனிதன் தனிமையாக இருப்பது நல்லதாக இருக்காது என்று கடவுள் தீர்மானித்தார். ஆதாம் பெயர் சூட்டின அத்தனை மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் துணை இருந்தது. அவனோ தனித்திருந்தான். அதன்மூலம் துணையின் அவசியத்தினை ஆதாமிற்கு புரியவைத்தார். மிருகங்களும் பறவைகளும் ஆணும் பெண்ணுமாகவே வார்த்தையினால் படைக்கபட்டன. ஏவாளோ, ஆதாமிலிருந்து (அவனுடைய விலா எலும்பினைக்கொண்டு) கடவுளின் கரத்தினால் படைக்கபட்டாள். இவ்வாறாக கடவுள், குடும்பத்தினை மாபெரும் நோக்கத்திற்காக தரிசனத்துடன் உண்டாக்கினார் (ஆதியாகமம் 2:18-24). அவற்றை பற்றி பைபிள் தெளிவாக நம்மிடம் பேசுகின்றது. அந்த தெய்வீக நோக்கம் என்ன? என்பதனை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

### 1. பலுகி பெருகிட..

ஆதியாகமம் 1:28 "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."

கர்த்தர் குடும்பத்தினை உண்டாக்கியதின் நோக்கங்களில் ஒன்று மனுக்குலம் பலுகி பெருக வேண்டும் என்பதாகும். கர்த்தர் குடும்பத்தினை படைத்ததின் நோக்கம் பலுகி பெருக வேண்டும் என்பதாக இருக்கின்றதால், அவர் கருத்தரிப்பதையோ, பிள்ளைப்பேற்றினையோ தடுப்பதில்லை என்பதனை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் குடும்பம் விருத்தியாவதை தடுத்தால், அவர் படைப்பின் நோக்கத்தினை அவரே குலைப்பதாக இருக்கும் அல்லவா? ஏசாயா 66:9 "பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச் செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார். பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்."

பழைய ஏற்பாட்டில் அன்னாளின் கர்ப்பத்தினை கர்த்தர் அடைத்திருந்தார் என்பதாக நாம் படிக்கின்றோம் (1சாமுவேல் 1:5). அந்த வரலாற்று நிகழ்வு என்பது விதிவிலக்கு தான் தவிர, மற்றபடி கர்த்தர் அன்னாளை பிள்ளையற்றவளாக்குவதற்கு அல்ல. அவள் கர்த்தருடைய பணிக்கு அர்ப்பணித்த அவளது பிள்ளையாகிய சாமுவேலை, நாம் இன்றளவும் நல்ல முன்மாதிரியான கர்த்தருடைய ஊழியனாக, தீர்க்கத்தரிசியாக கர்த்தரால் பயன்படுத்தப்பட்டதை நாம் பாராட்டுகின்றோம் (1 சாமுவேல் 3:19-21). அந்த சாமுவேல் இன்றளவும் இஸ்ரயேலிலும், கிறிஸ்தவ மார்க்க வட்டாரத்திலும் புகழ்பெற்ற தீர்க்கத்தரிசியாகவே பார்க்கப்படுகின்றார் என்பதே யதார்த்தமான உண்மையாக இருக்கின்றது. ஆகையால், இந்த ஒரு நிகழ்வை வைத்து கர்த்தரின் தன்மையை நாம் நிர்ணயிக்கலாகாது. கர்த்தரின் தன்மையை வைத்து, எப்பொழுதும் அவர் நிகழ்த்தும் நிகழ்வுகளை பார்க்ககூடிய, ஆவிக்குரிய கண்களுடையவர்களாக நாம் இருக்க வேண்டும் (எபேசியர் 1:17-19).

மேலும், கரு உண்டாவதினை தடுத்தப்படியினாலே ஓனான், கர்த்தரால் அழித்துப்போடப்பட்டான். ஏனெனில் அது கர்த்தரின் பார்வையில் மிகவும் பொல்லாப்பான பாவமாக இருந்தது (ஆதியாகமம் 38:8-10). பிள்ளைபேற்றினை தடுக்காமல், இஸ்ரயேல் மக்களுக்கு நன்மை செய்ததினால், எகிப்திய மருத்துவச்சிகள், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டனர் (யாத்திராகமம் 1:15-21). மனிதனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாக

இருக்கின்றபடியினால், கருக்கலைப்பு என்பதும் பாவமாக இருக்கின்றது (நீதிமொழி 20:7). பிள்ளைகள் கர்த்தர் தருகின்ற சுதந்திரமாகவும், அவரால் கிடைக்கும் பலன் என்பதனையும் நாம் மனதில் கொள்வோம். சங்கீதம் 127:3 "இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்." கர்த்தர் மனுக்குலம் பலுகிபெருகிட குடும்பத்தினை உண்டாக்கினார்.

## 2. பரிசுத்தமாக வாழ்ந்திட..

எபிரெயர் 13:4 "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்."

கர்த்தர் குடும்பத்தினை உண்டாக்கியதின் நோக்கங்களில் மற்றொன்று, மனுக்குலம் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்பதாகும். கர்த்தர் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவராய் ஒப்பற்றவராய் இருக்கின்றார். ஆகையால் தன்னுடைய சாயலாகவே மனிதனை பரிசுத்தமாக படைத்தார் (ஆதியாகமம் 1:26,27, பிரசங்கி 7:29). தன்னை போல பரிசுத்தமாக வாழும்படியாகவே படைத்தார் (1பேதுரு 1:15,16). நாம் உலகம் சொல்லுகின்றபடி அவரவர் மனசாட்சியின்படியோ அல்லது நமக்கு சரியான வழி தோன்றுகின்றபடியோ வாழாமல் (நீதிமொழி 14:12), நம்மை படைத்த கர்த்தருக்கு ஏற்றவிதமாக பரிசுத்தமாக வாழ வேண்டும் லேவியராகமம் 20:26 "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களா யிருப்பீர்களாக. நீங்கள் என்னுடையவர் களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன்."

ஆயினும், மனிதர்கள் இந்த பரிசுத்தத்தினை நான்கு வழிமுறைகளில் தவறவிட்டு, பரிசுத்த குலைச்சல் உண்டாக்கியதாக, மல்கியா தீர்க்கத்தரிசியின் மூலம் கர்த்தர் எச்சரித்தார். அவை என்னவென்று அறிவது, நாம் பரிசுத்தமாக வாழ உதவும். ஒன்று, குடும்பமாக இணைந்து வாழ வாழவேண்டும் (மல்கியா 2:15), இரண்டு, தள்ளிவிடுதல் (விவாகரத்து) செய்ய கூடாது (மல்கியா 2:16,17) மூன்றாவதாக, பரிசுத்தமற்ற இணைதல் (திருமண பந்தம்) கூடாது (மல்கியா 2:11-13). நான்காவதாக, ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்க வேண்டும் (மல்கியா 2:10,14,15).

### அ) குடும்பமாக இணைந்து வாழ வேண்டும்:

மல்கியா 2:15 "அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."

குடும்பமாக இணைந்து வாழ்வது என்பது, ஒரே வீட்டில் வசிப்பது மட்டுமல்ல, ஒன்றாக இணைந்து வாழ்வதாகும். ஒன்றாக இணைந்து வாழ்தலே தேவபக்தியுள்ள சந்ததியை உருவாக்க உதவும். ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுதல், கலந்து ஆலோசித்து காரியங்களை செய்தல், தினமும் காலை மற்றும் இரவு வேளைகளில் குடும்ப ஜெபம் செய்தல், ஒருவருக்கொருவர் முக்கியத்துவத்தினை உணர்ந்து மதிப்பளித்தல், ஒருவருக்கொருவர்


## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

ஒத்தாசை செய்தல், விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், பாராட்டுதல், கண்டித்தல் போன்றவை, நாம் ஒன்றாக வாழ உதவிகரமாக இருக்கும்.

கூடி வாழ்தல் கோடி நன்மை என சொல்வழக்கு உண்டு, பைபிள் நம்மை கூடி வாழ்ந்திட சொல்லுகின்றது. தனித்து வாழ்தல் பரிசுத்த குலைச்சலாகும். 1 கொரிந்தியர் 7:4,5 "மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி. அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள். உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடிவாழுங்கள்."

### ஆ) தள்ளிவிடுதல் கூடாது:

மல்கியா 2:16,17 "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள். ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள். பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள்பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே."

இரண்டாவதாக, தள்ளிவிடுதல் (விவாகரத்து) செய்ய கூடாது. அவ்வாறு விவாகரத்து செய்தல் பொல்லாப்பாக இருக்கின்றது. கர்த்தர் அதனை வெறுக்கின்றார். விவாகரத்து செய்வது, பரிசுத்த குலைச்சலாக இருக்கின்றது. குடும்பம் என்பது கர்த்தரால், ஏற்படுத்தின ஒன்றாக இருக்கின்றது. அதனை மனிதர்கள் பிரிக்ககூடாது [மத்தேயு 19:1-6]. ஆகையால், எந்த ஒரு குடும்பமும் பிரிவதற்கு, எந்த வகையிலும் நாம் காரணமாக இருந்துவிடக்கூடாது.

### இ) இணைவில் கவனம் வேண்டும்:

மல்கியா 2:11-13 "யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள். இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள். இப்படிச் செய்கிறவன் எவனோ, அவன் காவல்காக்கிறவனாயினும், உத்தரவுகொடுக்கிறவனாயினும், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார். நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள். ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக் கொள்ளவுமாட்டார்."

மூன்றாவதாக, பரிசுத்தமற்ற இணைதல் (திருமண பந்தம்) செய்யும் போது, பரிசுத்த குலைச்சல் உண்டாக்குகின்றோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கொடுத்த அதிகாரத்தின்படியே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயரால், பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கிலே தண்ணீராலும், வசனத்தினாலும் (ஆவியினாலும்) பிறந்து, இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையில் சேர்க்கபட்ட ஒவ்வொருவருமே [மத்தேயு 28:18-20; மாற்கு 16:16; யோவான் 3:1-6; அப்.2:36-47], கர்த்தரால் உலகத்திலிருந்து பிரிந்து எடுக்கபட்டவர்கள் ஆவர் [2 கொரிந்தியர் 6:14-18]. நாம் இருளின் அதிகாரத்திலிருந்து, ஒளியின் அரசுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் [கொலோ. 1:12]. ஆகையால் நாம் எந்த வகையிலும் உலகத்தோடு கலக்கவோ, ஒத்துப்போகவோ கூடாது [ரோமர் 12:1,2; கலாத்தியர் 6:14].

### ஈ) ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்க வேண்டும்

மல்கியா 2:10,14 "நம்மெல்லாருக்கும் ஒரே பிதா

இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்? ஏன் என்று கேட்கிறீர்கள். கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார். உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே.”

நான்காவதாக, ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருமே குடும்பத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும். குடும்பங்களில், அநேக வேளைகளில் உண்மையற்ற தன்மைதான் அனைத்து பிரச்சனைகளுக்கும், குழப்பங்களுக்கும் காரணமாக இருக்கின்றது. கணவன் மனைவிக்குள்ளான உறவில் மாத்திரமல்ல, பெற்றோர் பிள்ளைகள் என குடும்பத்தில் உள்ள ஒவ்வொருமே உண்மையுள்ளவர்களாக இருத்தல் அவசியம். உண்மையுள்ளவர்களே பரிபூரண ஆசீர்வாதம் பெற முடியும் [நீதிமொழி 28:20]. கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க முடியும் [மத்தேயு 25:21].

### 3) பயபக்தியுள்ள சந்ததியை உருவாக்க..

மல்கியா 2:15 “அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.”

கர்த்தர் குடும்பத்தினை உண்டாக்கியதின் நோக்கங்களில் மற்றொன்று, மனுக்குலம் தேவ பக்தியுள்ள சந்ததிகளை உருவாக்கிட வேண்டும் என்பதாகும். பெற்றோர் தேவ பக்தியாக இருக்கின்றோம். பிள்ளைகளை அப்படி வளர்க்கின்றோமா? என்பதனை சற்று நிதானித்து அறிவோம். பிள்ளைகளை உலகத்தோடு போட்டி போட்டு திறமையாக, அறிவாக வளர்க்க முயற்சிக்கின்றோம். அது போல ஆவிக்குரிய காரியங்களிலும் முயற்சிக்கின்றோமா? அவர்களை

## பொதுவான செய்திகள்

**நமது ஒவ்வொரு கைபேசியிலும் (Mobile Phone), திறன்பேசியிலுமே கண்டிப்பாக சேமித்து வைத்திருக்க வேண்டிய முக்கிய அவசர உதவி அலைபேசி/தொலைபேசி எண்கள்!**

1. அவசர உதவி அனைத்திற்கும் - 112
2. வங்கித் திருட்டு உதவிக்கு - 9840814100
3. மனித உரிமைகள் ஆணையம் - 044-22410377
4. மாநகர பேருந்தில அத்துமீறல் - 09383337639
5. போலீஸ் SMS - 9500099100
6. போலீஸ் மீது ஊழல் புகாருக்கு SMS - 9840983832
7. போக்குவரத்து விதிமீறல் SMS - 98400 00103
8. போலீஸ் -100
9. தீயணைப்புத்துறை -101
10. போக்குவரத்து விதிமீறல் - 103
11. விபத்து - 100, 103
12. ஆம்புலன்ஸ் - 102, 108
13. பெண்களுக்கான அவசர உதவி - 1091
14. குழந்தைகளுக்கான அவசர உதவி -1098
15. அவசர காலம் மற்றும் விபத்து -1099
16. முதியோர்களுக்கான அவசர உதவி - 1253
17. தேசியநெடுஞ்சாலையில் அவசர உதவி - 1033
18. கடலோர பகுதி அவசர உதவி - 1093
19. ரத்த வங்கி அவசர உதவி - 1910
20. கண் வங்கி அவசர உதவி - 1919

உலக கல்வியை படிக்க வைப்பதிலும், நிறைய சம்பாதிக்க வைப்பதிலும் காண்பிக்கின்ற அதே ஆர்வத்தினை சபைக்கடுத்தக் காரியங்களில் ஈடுபடவும், கர்த்தருக்கென்று கொடுப்பதிலும், அவரை தேடுவதிலும் காண்பிக்கின்றோமா? என்பதனைச் சற்று நிதானித்து அறிவோம்.

எந்த பிள்ளையும் தானாக நல்ல காரியங்களில் வளராது. நாம் தான் கற்றுக்கொடுத்து வளர்க்க வேண்டும் (நீதிமொழிகள் 22:6; சங்கீதம் 34:11). அவைகளை நாம் எப்படி செய்ய வேண்டும் என்றும் பைபிள் நமக்கு வெளிப்படுத்தியுள்ளது. உபாகமம் 6:6-9 "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்வாயாக. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக." மேலும், பிள்ளைகள் கர்த்தருடைய சொத்து (சங்கீதம் 127:4), அவர்களை அவர்கள் வழியிலோ, அல்லது நமக்கு பிரியமாகவோ வளர்க்கும்படியாக அல்ல, கர்த்தருக்கேற்றபடி வளர்க்க வேண்டும் எபேசியர் 6:4 "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக." நாம் அவ்வாறே செய்வோம், அதுவே நம் பொறுப்பாகும்.

இறுதியாக, அன்பானவர்களே! கர்த்தர் குடும்பத்தினை உண்டாக்கியதின் சில அடிப்படை நோக்கங்களை நாம் இந்த மாதம் கற்றுக்கொள்ள, கர்த்தர் நமக்கு தயவு செய்தார். அதனை உணர்ந்து, செயல்படுத்துவோம். சர்வ வல்ல கர்த்தர் உங்கள் குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am

**Heaven TV:** Thursday, Friday, Saturday, 6:30-7:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

பெண்கள் பகுதி

# கைவிடாத கர்த்தர்

பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம்மில் அனைவருடைய வாழ்க்கையும் செழிப்பாக, பிரச்சனை இல்லாமல், போராட்டம் இல்லாமல், வேதனை இல்லாமல் இருக்கும் போது நாம் தேவனோடு நெருங்கிய வாழ்க்கை வாழ்வோம் அல்லது சில நேரங்களில் கஷ்டம் வரும்போது அவரை தேடிவிட்டு பின்பு ஆசீர்வாதம் கிடைத்த பின்பு அவரை மறந்து விடும் காலங்களும் உண்டு. பிரியமானவர்களே! நமது ஆவிக்குரிய வாழ்க்கை சரியாக போய்க் கொண்டிருக்கும்போது பிரச்சனைகள் கஷ்டங்கள் வந்துவிட்டால் நம் நிலைமாறி தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ நமக்கு மிக கடினமான மனோநிலை அதினால் ஏற்பட்டு விடுகின்றது.

நம் விசுவாச வாழ்க்கையில் தளர்வு ஏற்பட அதிக வாய்ப்புகள் இருக்கும். ஆனால் வேதம் நம்மை எந்த நிலையிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொடுக்கிறது. **(பிலிப்பியர் 4: 11–13).**

இந்த உலகத்தின் சூழ்நிலை வெற்றிக்கொள்ள, கடவுளுக்கு பிரியமாக எந்த நிலையிலும் நாம் அவருக்காக வாழ நம்மை வசனத்தை கொண்டு பலப்படுத்திக் கொள்ள வேண்டும். **குணசாலியான ஸ்திரீயானவள் தன்னை பலத்தால் இடைகட்டி கொள்கிறாள். நீதிமொழிகள் 31:7.**

இந்த மாதம் நாம் படிக்கும் பெண் சாறிபாத் ஊர் விதவை. அவர்களும், அவர்களின் மகனும் அந்த ஒருவேளை சாப்பாடு சாப்பிட்டபின் அடுத்த வேளை உணவு இல்லாமல் மரிக்கும் தருவாயில் இருந்தனர். அந்த சமயத்தில் அவர்களைத்தேடி வந்த தேவ மனுஷன் எலியா தீர்க்கதரிசிக்கு உணவு கொடுக்கும்படி கர்த்தர் இந்த பெண்ணிற்கு கட்டளையிடுவேன் என்று சொல்லியிருந்தார். அந்தபடியேயும் செய்தார் **(2 இராஜாக்கள் 17:9).** அந்நிய தேவர்களை வணங்கும் தேசத்தில் குடியிருந்தாலும் இஸ்ரயேலின் தேவனை பற்றி இவர்கள் அறிந்ததினால் தேவன் அவர்கள் குடும்பத்தை வாழ வைத்தார். **இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது, கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது. (சங்கீதம் 144:15)** என்று நாம் வேதத்தில் வாசிக்கின்றோம்.

தேவன் சாறிபாத் ஊர் பெண்ணிற்கு கட்டளையிடுவேன் என்று எலியாவிடம் சொன்னபடி செய்தார். தேவப்பிள்ளைகளை நேசிக்கவும், பராமரிக்கும் மனதையும், எண்ணத்தையும் உடைய பெண்ணாக அந்த பெண் இருந்தாள்.

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" பவழமல்லி



பவழமல்லி அல்லது பவளமல்லி அல்லது பாரிஜாதம் என்னும் இம்மரம் தென் - தென்கீழ் ஆசிய நாடுகளில் வளரும். பவழமல்லியின் அறிவியல் பெயர் Nyctanthes arbor-tristis ஆகும். இதன் மலர் தாய்லாந்து நாட்டின் காஞ்சனபுரி மாநிலத்தில் மாநில மலராக சிறப்பிடம் பெறுகின்றது. பவழ (பவள) நிறக் காம்பும் வெண்ணிறமான இதழ்களும் உடைய பூக்களைக் கொண்டது.

இதற்குத் தனிச் சிறப்பான நறுமணம் உண்டு. குளிர் மாதங்களில் பின்னிரவில் பூத்து விடியற்காலையில் உதிரத்தொடங்கும். இம்மரம் இருக்கும் இடமே நறுமணம் வீசும். இந்த மலரைச் சேடல் என்றும் குறிப்பிடுவர். இம்மரம் 3 - 4 மீட்டர் உயரத்திற்கு மிக விரைவாக வளரும். நேரடியாக வெயிலிலேயே அல்லாது கொஞ்சம் நிழலிலும் வளர்க்கப்பட வேண்டும். இதன் இலைகள் நீள்வட்ட வடிவில் கூரான முனைகளுடையவை யாகக் காணப்படும்.

அதற்கென்று அவளை ஆயத்தப்படுத்துவதற்கு கர்த்தர் அவளிடத்திலே செயல்பட அவளும் தன் மனதை திறந்து கொடுத்தாள். கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தார்.

இஸ்ரயேலின் தேவனை பற்றி அவள் நன்கு அறிந்ததினாலேயே அவள் தன் ஜீவனை விட வேண்டிய சூழ்நிலையிலும் பிறருக்கு உதவுவதை துணிந்து செய்தாள். அவளின் தீர்க்கமான முடிவும் செயலும் அவளையும், அவள் குடும்பத்தாரையும் வாழ வைத்தது. அவளுடைய விசுவாசம் கிரியை உடையதாய் இருந்தது **(2 இராஜாக்கள் 17:16 ).**

அவளுடைய விசுவாசத்தின் வெளிப்பாடான கிரியை அவர்களை ஆசீர்வதித்தது. அவளையும், அவள் பிள்ளையையும் தேவன் கைவிடவே இல்லை.

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்று நாம் வேதத்திலே வாசிக்கிறோம். அதுபோலவே, இந்த பெண்ணும் தனக்கு உண்டான எல்லாவற்றையும் அவள் கொடுத்தபோது தேவன் அவர்களை கைவிடவில்லை. எலியா தீர்க்கதரிசியின் தேவையை அறிந்து, அவருக்கு உணவு கொடுத்து, தங்குவதற்கு இடமும் கொடுத்தாள்.

ஒரு நாள் அந்த பெண்ணுடைய மகன் வியாதிப்பட்டு மரித்துபோனான். அதை அறிந்த எலியா அவனுக்காக கர்த்தரிடத்தில் ஊக்கமாக ஜெபித்தார் **(சங்கீதம் 46:12).** அந்த சிறுவன் உயிர் பெற்றான்.

நாம் தேவனுக்கும், தேவ வசனத்திற்கும், தேவப் பிள்ளைகளுக்கும், ஆவிக்குரிய காரியத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழும்பொழுது, நம் தேவைகளை, நம் குறைகளை, நம் மனதின் ஏக்கத்தை தேவன் நமக்கு கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார். **(பிலிப்பியர் 4:19).**

ஆனால், நாம் அவரை முழு இருதயத்தோடும் முழு பலத்தோடும் முழு மனதோடும் அன்புகூர வேண்டும் என்று தேவனுடைய வசனம் சொல்கிறது. **(மத். 22:37-40).**

கர்த்தருக்கு நாம் முழுமையும் கொடுத்த பின்பு நாம் எப்படி மாம்சத்தை நேசித்து அதற்காக வாழ முடியும். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும் என்று வசனம் சொல்லுகிறது. **(1 யோவான் 2:17).** ஆம் பிரியமானவர்களே! இந்த உலகத்தில் நாம் வாழும்வரை தான் இந்த உலகத்தின் காரியங்கள் நமக்கு தேவைப்படுகின்றது. எனவே, நாம் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க தேவையில்லை. தேவனுடைய சித்தம் நிறைவேற அதற்கென்று வாழ்வோம்! **(ரோமர் 12:2).**

பிரியமானவர்களே! நம் வாழ்விலும் போராட்டம், கஷ்டம், வியாதி, பிரச்சனைகள் எது வந்த போதிலும் இந்த சாறிபாத் பெண்ணைபோல சர்வ வல்லவர் நம்மோடு இருக்கிறார் என்று நம்பிக்கையிலே வாழ்வோம். தன் ஜீவனை விட வேண்டிய நிலையிலும், கர்த்தருடைய பிள்ளையின் சொல்லை கேட்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவள் நடந்ததினால் அவளும், அவளுடைய வீடும், அவளுடைய பிள்ளையும் ஆசீர்வதிக்கப்பட்டது. நாமும் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்போமானால் அல்லது இப்படியெல்லாம் செய்தால்தான் பரலோகம் போக முடியுமா? என்று ஆவிக்குரிய காரியங்களில் நாம் பங்கு பெறாமல் தவறவிட்டு இருக்கலாம். இனி வரும் காலங்களில் ஆவிக்குரிய காரியங்களை செய்வதற்கு நாம் துணிந்து முடிவெடுப்போம். கிறிஸ்து நமக்கு ஜீவனாக இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வில் வரும் சவால்களை நாம் வெற்றி பெறுவோம். கர்த்தருக்கு பயப்படுகிற பெண் புகழப்படுவாள்.

– சகோதரி. **பெவர்லி விடியா**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | A. அரவிந்த் | – | மதுரை |
| 2) | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 3) | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 4) | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 5) | G. ஜெர்லின் | – | ரஸ்தா |
| 6) | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 7) | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 8) | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |
| 9) | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 10) | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 11) | M. அபி சூர்யா | – | எழுகம்வலசு |
| 12) | D. டேஃனி | – | சென்னை |
| 13) | D. ஜீனித்தா | – | சென்னை |
| 14) | P. பாண்டியன் | – | வேலூர் |

# இயேசு தரும் நிரந்தரமான விடுதலை வேண்டுமா?

பிரியமான வாலிப தம்பி, தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள்ளாக நான் விசுவாசிக்கிறேன்.

நாம் ஓராண்டு காலமாக தொடர்ந்து ஆண்டவர் இயேசுவின் அற்புதங்களையும், அதற்கான உள்ளார்ந்த மற்றும் ஆவிக்குரிய நோக்கங்களையும் ஆராய்ந்து வருகின்றோம். அந்த வரிசையில் இந்த மாதமும் கூட ஆண்டவர் செய்த ஒரு அற்புதத்தையும், அதன் ஆவிக்குரிய நோக்கத்தையும் படிப்போம்.

**லூக்கா 13:11 –13** –ல் கிட்டத்தட்ட 18 ஆண்டுகள் சரீரத்தில் கடுமையான பெலவீனங்களைச் சுமந்து, நிமிர்ந்து கூட நடக்க முடியாத ஒரு பெண் கடுமையான நிலைமையில் இருந்தாள். இயேசு அவளைக் கண்டு தம்மிடத்தில் வரும்படி அந்த பெலவீனமான பெண்ணை அழைத்தார். அவள் இயேசு அழைத்ததைக் கண்டு அவரிடம் சென்றாள். அவள்மீது இயேசு தம்முடைய பரிவையும், அன்பையும், இரக்கத்தையும் காட்டினார். அவள்மீது இயேசு தமது கைகளை வைத்து, **பெண்ணே உன் பெலவீனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டாய்** என்று சொன்னார். அந்தப் பெண்ணின்மீது தமது கைகளை வைத்தார். உடனே அவள் பெலவீனங்கள் எல்லாமே நீங்கி, நிமிர்ந்து நின்று சுகம் பெற்றாள். சுகம்பெற்றதை தன்னுடைய சரீரத்தினால் உணர்ந்து, அவள் தேவனை உயர்த்தி மகிமைப் படுத்தினாள்.

பிரியமான வாலிபர்களே! இயேசு நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் தேவையானவராக, முக்கியமானவராக, அவசியமானவராக இருக்கின்றார். அந்தப் பெண் 18 வருடம்



வியாதியின் அடிமைத்தனத்திலிருந்து இயேசுவால் மட்டுமே விடுதலையையும், சுகத்தையும், ஆறுதலையும், அவளுக்கான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்க முடிந்தது.

மாத்திரமல்ல, **லூக்கா 19:10–ல்** **"இழந்து போனதை இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்தார்"** என்று வாசிக்கின்றோம்.

ஆம், பிரியமானவர்களே! இயேசுவினால் வெறும் சரீர விடுதலை மட்டும் கொடுக்க முடியும் என்றல்ல, அவரால் உலகத்தில் சிக்கி, பாவ உலையில் தவிக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவையும் விடுவித்து வாழ்வளிக்க முடியும். **கொலோ. 1:13–ல்** இருளின் அதிகாரமாகிய பாவ உலகிலிருந்து விடுதலையை இயேசுவால் மட்டுமே கொடுக்க முடியும் என்பது நாம் அறிந்ததே. ஆகவே, ஆண்டவரை விசுவாசித்து, அவரில் அன்புகூர்ந்து, பாவவிடுதலையையும், அவரால் கிடைக்கும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தப் படுவோமா? தேவன் உங்களை வசனத்தின்மூலம் வழிநடத்துவாராக.

– உங்கள் அண்ணன்

**JP**

சிறுவர் பகுதி

# பண்பான மருமகள் (ரூத்)

சிறு பிள்ளைகளே! இந்த மாதம் கிருபையுள்ள வார்த்தையின் மூலம் உங்களோடு பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். பண்பான மருமகள் ரூத் அக்காவைப் பற்றி படிக்கலாம். பிள்ளைகளே பண்பு என்றால் என்ன? பண்பு என்பது நம் குணம் சார்ந்தது. சக மனிதர்களிடம் அன்பு காட்டுவது, மனித உயிரினத்தின் மீது இரக்கப் பண்பு கொண்டிருத்தல் என்பது மனித நேயத்தின் உயரிய நற்பண்புகளாகும்.

பிள்ளைகளே! ரூத் அக்கா மோவாப் தேசத்துப் பெண், இவர் இஸ்ரயேல் தேசத்து நகோமியின் மகனை திருமணம் செய்து கொண்டார். நகோமியின் கணவன் பெயர் எலிமெலேக்கு. நகோமிக்கு இரண்டு குமாரர்கள். இவர்களில் ஒருவரைத்தான் ரூத் அக்கா திருமணம் செய்து கொண்டார். ஒருநாள் நகோமியின் கணவன் இறந்துபோனார். பிறகு சில நாள் கழித்து நகோமியின் இரண்டு குமாரர்களும் இறந்துபோனார்கள்.

நகோமி தனித்து நின்றாள். ஆதரவு இல்லாமல் துன்பம் நிறைந்தவளாய் இளகிப் போய்க்கிடந்தாள். இந்த நிலையில்தான் ரூத் அக்காவின் நற்பண்புகளை நாம் வேதத்தில் வாசிக்க முடியும். **ரூத் 1:1-18 வரை** வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ரூத் அக்காவின் நற்பண்புகளை நாம் வாசிக்கலாம்.

**ரூத் 1:8 – மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் தயைசெய்ததுபோல கர்த்தர் உங்களுக்கும் தயை செய்வாராக.** பிள்ளைகளே! கவனியுங்கள். ரூத்தின் கணவன் இறந்த பிறகு தன் மாமியாகிய நகோமியோடு வாழ்ந்து வந்தாள். ரூத் தன் கணவனோடு இருந்த காலத்தில் யாருக்கும் தீவினையும் செய்யாமலும், எந்தத் துன்பமும் அளிக்காமல் நேர்மையாக, பிறரிடம் தயவுள்ள பண்பைக் கொண்டிருந்தார்.

**ரூத் 1:12 – நான் வயது சென்றவள்;** பிள்ளைகளே இந்த வார்த்தையைக் கவனியுங்கள். ரூத்தின் மாமியார் முதிர்வயதில் இருந்தார். எந்த வேலையும் செய்ய முடியாத நிலையிலும் எல்லாவற்றையும் இழந்தநிலையிலும் இருந்தார். பிள்ளைகளே! உங்கள் வீட்டில் உள்ள தாத்தா பாட்டியைப்போல, வயது சென்றவளாக எந்த வேலையும் செய்ய இயலாத நிலையில் இருந்தாள். ரூத் அக்கா தன் மாமிக்கு ஆறுதல் அளித்து, தன் மாமியின் துன்பத்தைக் கண்டு மனங்கசந்து அழுதாள். தன் மாமிக்கு ஆறுதல் கூறி தன் மாமியின் துன்பத்தைப் போக்கினாள்.

ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள். **ரூத் 1:17** இவ்வாறாக சொல்கிறது, **நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து அங்கே அடக்கம் பண்ணப்படுவேன், மரணமேயல்லாமல் வேறொன்றும் நம்மை பிரிக்கக்கூடாது** என்ற உறுதியான செயல்பாடுகள் கொண்ட பண்புடையவளாக இருந்தாள். ரூத்தின் நற்பண்புகளினாலே கர்த்தர் அவளை ஆசீர்வதித்தார்.

பிள்ளைகளே! ரூத் அக்காவிடம் இருந்து நாம் கற்றுக்கொண்டது என்ன? பிறருக்கு துன்பம் அளிக்காத நற்பண்பு, இயலாதவர்களின் துன்பத்தைப்போக்கும் நற்பண்பு, இளகிய மனமும், உறுதியான செயல்பாடுகளும் கொண்ட நற்பண்பு. எந்த சூழ்நிலைகளிலும் நாம் பிறருக்கு துன்பத்தைபக் கொடுக்கக்கூடாது, நம் பெற்றோர்களாக இருந்தாலும், நாம் துன்பம் விளைவிக்காமல், இரக்க மனமுள்ளவர்களாக இருப்போம். இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குவோம். **மத்தேயு 5:7**– இவ்வாறாக ஆண்டவர் இயேசு பேசுகிறார், இரக்கமுள்ளவர்களுக்கு இரக்கம் கிடைக்கும் என்று சொல்கிறார். பிள்ளைகளே! நாமும் கூட ரூத் அக்காவைப்போல இளகிய மனமுடையவர்களாக இருப்போம். ஆமென்.

**மனப்பாட வசனம் : மத்தேயு 5:7**
**“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.”**

– சகோ. பீட்டர்

சிறுவர் பகுதி

# கர்த்தர் உலகத்தை படைத்தார்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா! எல்லாரும் எப்படி இருக்கிங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த மாதம் நாம் வாழும் இந்த அதிசயமான உலகத்தை ஏழு நாட்களில் கர்த்தர் எவ்வாறு படைத்தார் என்பதைப் பற்றி படிக்கலாம் வாங்க!!

**முதலாம் நாள்:** துவக்கத்திலே கர்த்தர் வானத்தையும் பூமியையும் படைத்தார். பூமியானது ஒழுங்கில்லாமலும் வெறுமையையாயும் இருந்தது. பிறகு கர்த்தர் வெளிச்சத்தை உண்டாக்கினார். வெளிச்சம் மிகவும் நல்லது என்று நினைத்தார். கர்த்தர் வெளிச்சத்திற்கு பகல் என்று பேரிட்டார்.

இருளுக்கு இரவு என்று பேரிட்டார். இப்படியாக முதலாம் நாள் முழுமையடைந்தது. நம்மைப் படைத்த கர்த்தர் நமக்காக வெளிச்சத்தை படைத்தார்.

**இரண்டாம் நாள்:** இரண்டாம் நாளிலே கர்த்தர் பூமி முழுவதும் நிரம்பி இருந்த தண்ணீரின் நடுவில் ஆகாய விரிவைப் படைத்தார். ஆகாய விரிவிற்கு கர்த்தர் வானம் என்று பேரிட்டார். தண்ணீரில் இருந்து தண்ணீரை இரண்டாகப் பிரித்தார். அதாவது வானத்தின் கீழ் பூமியில் இருக்கும் தண்ணீருக்கும் வானத்தின்மேல் (மேகங்களில்) இருக்கும் தண்ணீருக்கும் இடையில் இடைவெளியை உண்டாக்கினார். இப்படியாக இரண்டாம் நாள் முழுமையடைந்தது. அருமையான செல்லப் பிள்ளைகளா! நாம் அருந்தும் குடிநீரான நிலத்தடி நீர். ஆற்றுத்தண்ணீர் போன்ற நீர் ஆதாரங்களுக்கு காரணமாக இருப்பது மழை நீர் ஆகும். அந்த மழைநீர் வருவதற்கு காரணமாக இருக்கும் மேகத்தையும், வானத்தையும் நம்முடைய உண்மையான கடவுள் இரண்டாம் நாளிலே படைத்தார்.

**மூன்றாம் நாள்:** கர்த்தர் மூன்றாம் நாளிலே பூமி முழுவதும் நிரம்பி இருந்த தண்ணீரை ஓரிடமாக சேரவும், வெட்டாந்தரையையும் உண்டாக்கினார். அதாவது பூமியில் உள்ள நிலப்பகுதியை உண்டாக்கினார். கர்த்தர் அதை நல்லது என்று கண்டார். பின்பு கர்த்தர் பூமியில் உள்ள நிலப் பகுதியில் மீண்டும் தானாகவே விளையக்கூடிய அனைத்துவித மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் படைத்தார். மேலும் புல் பூண்டுகளையும் படைத்தார். மனிதன் உயிர்வாழ அவசியமான உணவான பழங்களையும், காய்களையும், கீரை வகைகளையும் மூன்றாம் நாளிலே கர்த்தர் படைத்துள்ளார்.

**நான்காம் நாள்:** கர்த்தர் நான்காம் நாளிலே பகல் வேளையை ஆள்வதற்கு சூரியனையும், இரவு வேளையை ஆள்வதற்கு நிலவையும் படைத்தார். நாம் அனைவரும் பகலில் மட்டுமே ஏன் பள்ளிக்கு செல்கிறோம்?. நம்முடைய பெற்றோர்களும் பகலில் மட்டுமே வேலைக்குச் செல்கின்றனர். ஏனென்றால் பகலில் நமக்கு வெளிச்சம் தருவதற்கும், நமது உடலிற்கு வெப்பம் தரவும் சூரியன் இருக்கிறது. அதே நேரத்தில் இரவு நேரத்தில் நாம் உறங்கும்பொழுது மிகவும் குறைவான, கண்களுக்கு இதமான வெளிச்சத்தை தருகின்ற நிலவை கர்த்தர் நமக்காக நான்காம் நாளிலே படைத்தார்.

**ஐந்தாம் நாள்:** கர்த்தர் ஐந்தாம் நாளில் வானத்தில் பறக்கும் உள்ள அனைத்துவித பறவை இனங்களையும், பூமியில் நீரில் வாழும்




அனைத்துவித நீர் வாழ் உயிரினங்களையும் படைத்தார். நாம் இருக்கும் பூமியில் வானத்தைப் பார்க்கும்பொழுது ஏதாவது ஒரு பறவையை நம்மால் பார்க்க முடியும். எவ்வளவு அழகான பறவைகளை நம்முடைய கர்த்தர் படைத்திருக்கிறார். நீரில் வாழும் மீன்களையும், ராட்சத மீன்களான திமிங்கலம். சுறா போன்ற மீன்களையும் கர்த்தர் ஐந்தாம் நாளில் படைத்தார்.

**ஆறாம் நாள்:** கர்த்தர் பூமியின் நிலப்பகுதியில் வாழும் சகலவித நாட்டு மிருகங்களையும், எடுத்துக்காட்டாக மாடு, ஆடு போன்ற விலங்குகள், காட்டுப் பகுதியில் வாழும் மிருகங்களையும் (எ.கா: சிங்கம், புலி, சிறுத்தை), ஊரும் பிராணிகளையும் படைத்தார் (எ.கா: தேள், பூரான்). பிறகு கர்த்தர் மனிதனை படைத்திட முடிவு செய்தார். மனிதனை தம்முடைய சாயலாக படைக்க முடிவு செய்தார். மனிதர்களாகிய நம்மைப் படைப்பதற்கு பூமியின் மண்ணினாலே நம்மை உருவாக்கி, நமக்கு உயிர் தரும் சுவாசக்காற்றை அவனுடைய நாசியிலே (மூக்கு) ஊதினார். மனிதன் உயிர் பெற்றான். ஆறாம் நாள் முழுமையடைந்தது.

**ஏழாம் நாள்:** கர்த்தர் ஆறுநாளும் உலகத்தைப் படைப்பதற்கு அயராது வேலை செய்து, ஏழாம் நாளிலே ஓய்வு எடுத்தார்.

**உலகம் :** எனக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகளா!! உங்கள் அனைவரிடமும் ஒரு கேள்வி? உங்கள் வீட்டின் உள்ளே ஒரு கல்லை ஒரு குறிப்பிட்ட அறையின் உள்ளே வைத்து விட்டு, அறைக் கதவை மூடிவிட்டு குறிப்பிட்ட நாட்கள் கழித்து கதவைத் திறந்து பார்த்தால் அந்தக் கல் வேறு இடத்திற்கு தானாக சென்றிருக்குமா? போகாது அல்லவா! அதே போலதான் இந்த உலகமும் தானாக உருவாகவில்லை. இந்த உலகத்தையும், அதில் உள்ள அனைத்து உயிர்களையும் நம்முடைய உயிருள்ள, உண்மையான தேவனாகிய கர்த்தர் படைத்தார்.

**மனப்பாட வசனம் : ஆதியாகமம் 2:4**
**"தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே."**

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

சிறுவர் பகுதி

# கழுதை பேசியது

கடவுளுக்கு பிரியமான அன்பு செல்லங்களா! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்?

கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கிறீர்களா? இப்பக்கூட பைபிளில் ஒரு கழுதை பேசியது பற்றி நாம் தெரிந்துக் கொள்ளலாமா?

மோவாபின் இராஜாவாகிய பாலாக், இவர் என்னிடத்தில் வந்து கடவுளுடைய மக்களாகிய இஸ்ரயேலின் ஜனங்களை சபிக்கும்படியாக சொன்னார். அப்பபொழுது அவர்களை நான் ஜெயித்து முறியடிப்பேன் என்றார்.

கடவுள் பிலேயாமை நோக்கி; நீ போகக்கூடாது என்று சொல்லிவிட்டார். உடனே பிலேயாம் பாலாக் இராஜாவை பார்த்து நான் வரமாட்டேன், நான் வணங்கும் கடவுள் என்னை நீங்கள் சொல்லும் ஜனங்களை சபிக்க போகக்கூடாது என்றார். அப்பொழுது பாலாக் ராஜா என்ன செய்தார் தெரியுமா?

நான் உனக்கு அதிகமாக பணம் தருகிறேன் என்று பிலேயாமிடம் சொன்னார். பிலேயாம் பண ஆசையால் இஸ்ரயேல் மக்களை சபிக்கிறதற்காக ஒரு கழுதையின் மீது ஏறிபோய்க் கொண்டிருந்தார். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா?

கடவுளுக்கு கோபம் மூண்டது. அதனால் சங்கார தூதன் பிலேயாமுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார் ஏன் தெரியுமா? கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களை சபிக்ககூடாது என்று சொன்னார். அதை மீறி சபிக்க போனார்.

ஆனாலும் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார். கழுதை சங்காரத் தூதனை கண்டு வலது, இடதுபுறம் விலகிபோனது. அதனால் பிலேயாம் கழுதையை அடித்தார். கழுதை வாய்திறந்து பேசத் துவங்கி, சூழ்நிலைகளைச் சொல்லி எச்சரித்தது. பிலேயாம் மனந்திரும்பினார்.

கடவுளுக்கு பிரியமான செல்லப் பிள்ளைகளா! கழுதை பார்த்தீர்களா? தன் கூட இருக்கிறவர் தனக்கு எவ்வளவு துன்பம் கொடுத்தாலும் அவரை காப்பாற்ற முயற்சி செய்து காப்பாற்றியது. கழுதை பேசியதால்தான் பிலேயாம் காப்பாற்றப்பட்டார்.

நீங்களும் கூட சபைக்கு போகிறீர்கள், நல்ல



பழக்கங்களைக் கற்றுகொள்கிறீர்கள். கடவுளின் பாதுகாப்பு உங்களுக்கு கிடைக்கிறது. இதைபோல உங்கள் நண்பர்கள், தெரிந்தவர்கள், இவர்கள் எல்லாருக்கும் கடவுளின் பாதுகாப்பு வாங்கி கொடுக்க சபைக்கு அழைக்கிறீர்களா? இந்த வருடம் உங்களைப்போல அநேகரை சிறுவர் பகுதியை படிக்க வையுங்கள். உங்கக்கூட சபைக்கு அழைத்துச் செல்லுங்கள். செய்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : பிலிப்பியர் 1:17** "சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள்."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. ரூத் அக்காவிடம் இருந்த நற்பண்புகள் என்னென்ன?
2. படைப்பிலே தேவன் நான்காம் நாள் எவைகளை படைத்தார்?
3. பிலேயாம் யாரை சபிக்கிறதற்காக எதின்மேல் ஏறிச் சென்றான்?
4. தேவன் கொடுத்த மன்னாவின் ருசி எதற்கு ஒப்பாயிருந்ததாக வேதம் சொல்கிறது?
5. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மன்னாவோடு ஒப்பிட்டு பேசுகையில் தன்னை யார் என்று சொல்கிறார்?

சிறுவர் பகுதி

# மன்னா

*யாத்திராகமம் 16ம் அதிகாரம்*

செல்ல குழந்தைகளே! உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். தேவன் உங்களோடிருந்து, சகல ஞானத்திலும், கிருபையிலும் வழிநடத்துவாராக.

குட்டீஸ்! இந்த மாதம் நாம் தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு வனாந்திர பிரயாணத்தில் கொடுத்த ருசி மிகுந்த ஒரு உணவைப் பற்றி பார்க்க இருக்கிறோம். தேவன் இஸ்ரயேலரை வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் வழிநடத்தினார். அப்பொழுது அவங்களுக்கு சாப்பிடுவதற்கு வானத்திலிருந்து உணவைக் கர்த்தர் பரிசாக கொடுத்தார். அதை முதல் முறையாக கர்த்தர் பரிசாக கொடுக்கும்போது, அது புல்மீது அங்கங்கு கிடந்தது. அதை பார்த்து இஸ்ரயேல் மக்கள் **"மன்னா, மன்னா"** அப்படின்னு ஆச்சரியத்தோடு கத்தினாங்க. அதுக்கு என்ன அர்த்தம் என்றால்? **"என்ன இது! என்ன இது!"** என்று அர்த்தம். ஆச்சரியப்பட்டு சொல்ற ஒரு வார்த்தைதான் மன்னா என்பது.

இந்த மன்னா முத்தைப்போல வெண்மை நிறமும், அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது என்று வேத வசனம் சொல்லுது. தேனிட்ட பணிகாரம் மெல்லிசா ருசியா இருந்திருக்குன்னு வசனம் சொல்லுது. மன்னா என்பது தூதர்கள் சாப்பிடும் ஒரு உணவு என்று வேத வசனம் சொல்லுது. எங்கன்னு கேட்கிறீங்களா குட்டீஸ்! சங்கீதம் 78:25 "தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினீர்" பார்த்தீர்களா?

இஸ்ரவேல் வனாந்தர பிரயாணம் முழுவதிலும், கானான் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவை புசித்தார்கள். 40 வருஷம் கர்த்தர் மன்னாவினாலே அவர்களைப் போஷித்தார். கர்த்தர் அவர்களை பசியினால் வாடவிடவில்லை. ஏனென்றால் அழைத்தது அவர் அல்லவா!

ஆனால் "இஸ்ரயேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியை புசிக்கக்கொடுப்பவர் யார்?" என்றார்கள். கர்த்தர் 40 வருஷங்களா தூதர்கள் சாப்பிடும் உணவு அதை மனிதர்களுக்கு கொடுத்தார். ஆனா அதை அவங்க திருப்தியா



நினைக்காம, எங்களுக்கு இறைச்சி வேணும். எங்களுக்கு காடை வேண்டும், கௌதாரி வேணும்னு கேட்டாங்க.

குட்டீஸ்! ஆண்டவர் உங்களுக்கு அத்தியாவசிய தேவையோ அதை கொடுத்திருக்கிறார். நல்ல அப்பா, அம்மா, நல்ல நண்பர்கள், உறவினர்கள், நல்ல சமுதாயம் இப்படி போன்ற எல்லாவற்றிலும் தேவன் உங்களுக்கு நலமானதும், தேவையானதும் சரியான நேரத்தில் தேவன் உங்களுக்கு கிடைக்க நிச்சயம் உதவிசெய்வார். அதில் சந்தோஷமா இருங்க, இஸ்ரயேல் மக்களைப்போல எங்களுக்கு அது வேணும், இது வேணும் என்று அடம்பிடிக்கக் கூடாது குட்டீஸ்.

அதேபோல நமது அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தன்னை மன்னாவோடு ஒப்பிட்டு பேசறாரு. ஏன்னு தெரியுமா? எப்படி வானத்திலிருந்து மன்னா இறங்கி வந்ததோ, அதேபோல இயேசு கிறிஸ்துவும் வானத்திலிருந்து இறங்கி வந்தாரு, அதனாலே அவர் ஜீவ அப்பம் நானே, ஜீவ மன்னா நானே என்று சொல்றாரு. இஸ்ரயேல் மக்கள் மன்னா முதல் முறையாக விழுந்தவுடனே அதை எடுத்து அதை சாப்பிட்டு, டேஸ்ட் பார்த்த உடனே தன்னுடைய வீட்டில் உள்ளவர்கள் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தாங்க. நீங்களும் இயேசு என்னும் மன்னாவை ருசி பார்ப்பது மட்டுமல்ல, உங்கள் நண்பர்களுக்கும், உங்கள் உறவினர்களுக்கும் ஜீவ மன்னாவாகிய இயேசுவை எல்லாருக்கும் அறிமுகப் படுத்துவீர்களா? தேவன் அதற்கு உங்களுக்கு உதவிசெய்வாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 85:12 "கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்."**

– சகோ. ஜான் செல்லையா

## பிப்ரவரி மாத கேள்விகள்

(அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இருந்து)

1. வானத்தை அண்ணாந்துபார்த்தபோது தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு நிற்கிறதையும் கண்டது யார்?
2. எந்த மாயவித்தைக்காரன் பிலிப்பு பிரசங்கித்ததை கேட்டு ஞானஸ்நானத்தை பெறும்படி வந்தான்?
3. இரதத்தில் போய்க்கொண்டிருந்த எத்தியோப்பிய தலைவனை ஓடிப்போய் சந்தித்தவன் யார்?
4. சவுலுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் யார்?
5. சீமோனை அழைத்து வரும்படி யோப்பாவுக்கு மனுஷரை அனுப்பியவர் யார்?
6. முதல் முதலில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் எங்கு வழங்கப்பட்டது?
7. பவுல் எந்த பட்டணத்துக்கு சென்றிருந்தபோது குறிசொல்லுகிற பெண்ணிடமிருந்த ஆவியை துரத்தினார்?
8. இரத்தாம்பரம் விற்கிற ஸ்திரீ ஒருத்திக்கு பவுலும், சீலாவும் ஞானஸ்நானம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது –அவள் பெயர் என்ன?
9. மாயவித்தைக்காரர்கள் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுக்கு இணையான எதை சுட்டெரித்தார்கள்?
10. பவுல் யாருடைய பாதத்தருகே வளர்ந்ததாக சொன்னார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-03-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. யோவான் 14:8
2. யோவான் 15:2
3. யோவான் 16:8
4. யோவான் 14:16
5. யோவான் 14:27
6. யோவான் 19:28
7. யோவான் 19:30,31
8. யோவான் 20:1
9. யோவான் 21:15–17
10. யோவான் 21:20–22

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | J.V. சுந்தரபாய் வில்லியம் | - | சேலம் |
| 2) | S. ஷீபா ஞானவின்சா | - | டோனாவூர் |
| 3) | D. சந்திரன் மோசஸ் | - | பெங்களூர் |
| 4) | N. ஜான் செல்லையா | - | மதுரை |
| 5) | J. ஜெயராணி ஜான் | - | மதுரை |
| 6) | Mrs.P. சமாதானம் பீட்டர் | - | விருதுநகர் |
| 7) | P. ரேச்சல் ஜானிமா | - | நெல்லை |
| 8) | S. அசோக்குமார் பிரின்ஸ் | - | தூத்துக்குடி |
| 9) | S.G. சேகர் | - | ராணிபேட்டை |
| 10) | Mrs.D. குளோரி திலகவதி | - | சென்னை |
| 11) | Mrs. சூரிய பிரியா | - | மதுரை |
| 12) | G. பார்த்திபன் | - | வேலூர் |
| 13) | S. டேவிட் சாந்தகுமார் | - | வல்லம் |
| 14) | J.K. ஜாய்ஸ் ஷகிலா | - | நாகலாபுரம் |
| 15) | M.S. ஜேம்ஸ் | - | திண்டுக்கல் |
| 16) | Mrs.R. சரோஜா | - | தென்கலம் |
| 17) | A. லலிதா | - | புதுக்கோட்டை |
| 18) | A. டேவிட் ஜெயசந்திரன் | - | மதுரை |
| 19) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - | சேலம் |
| 20) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - | மதுரை |
| 21) | Y. ஜெயசுதா பொன்செல்வி | - | சென்னை |
| 22) | Mrs.A. இமல்டா சுந்தர்சிங் | - | ஈரோடு |
| 23) | Mrs. தேவி ராஜாசிங் | - | தூத்துக்குடி |
| 24) | S.S. ஞானவின்சா ஸ்பர்ஜன் | - | டோனாவூர் |
| 25) | Mrs. ஹெப்ஸி தாமஸ் | - | படப்பை |
| 26) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - | புதுவை |
| 27) | Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 28) | P.S. ருக்மணி | - | கோபி |
| 29) | Mrs.C. வள்ளி | - | கரூர் |
| 30) | Mrs. காந்தா மனோகரன் | - | திருச்சி |
| 31) | Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் | - | நெல்லை |
| 32) | Mrs. பட்ரிசியா டேவிட் | - | சேலம் |
| 33) | Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் | - | தூத்துக்குடி |
| 34) | Mrs. ரெக்ஸிலின் டெல்பினா | - | தூத்துக்குடி |
| 35) | Mrs. மேரி ராஜ் | - | மதுரை |
| 36) | Mrs. ஹெலன் திலக் | - | தூத்துக்குடி |
| 37) | Mrs. தெல்மா ஸ்டான்லி | - | மதுரை |
| 38) | A. கார்பஸ் பிலேமோன் | - | மதுரை |
| 39) | C. வைலட் கிறிஸ்டோபர் | - | தளவாய்புரம் |
| 40) | J. ஜான்சி | - | ஆனைமலை |
| 41) | A. ரோஸ்மேரி | - | சென்னை |
| 42) | Mrs. பெரில் பாஸ்கர் | - | படப்பை |
| 43) | Mrs. சாந்தி வில்லியம் | - | புதுக்கோட்டை |
| 44) | S. கார்த்திக் | - | கரூர் |
| 45) | M. ராஜா | - | கரூர் |
| 46) | M. ஈஸ்வரி | - | கரூர் |
| 47) | G. ஏஞ்சலம்மாள் | - | மதுரை |
| 48) | Mrs. இந்திரா பாண்டி | - | மதுரை |
| 49) | Mrs. ராணி குமரன் | - | கரூர் |
| 50) | S. பாக்கியராஜம் | - | மதுரை |
| 51) | Mrs.P. உமாராணி | - | சித்தோடு |
| 52) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - | புதுவை |
| 53) | R. ஞானசிரோன்மணி | - | மதுரை |
| 54) | Mrs. குளோரி பால்ராஜ் | - | தஞ்சாவூர் |
| 55) | D.I.அன்பு சுதந்திரம் | - | நெல்லை |
| 56) | P. ஷைனி | - | காங்கேயம் |

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : **Arasaradi, Madurai**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th February 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th February 2025


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To